**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,**
**FAST TRACK COURT, ARANI.**
**S.C.No.95/2022**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | : | **P.W.1** |
| **Name** | : | திரு.குமரேசன் |
| **Father's Name** | : | மோகனம் |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

எதிரி ஆஜர்.

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.11.2023.**

முதல் விசாரணை -

நான் விளை கிராமத்தில் வசிக்கிறேன். கேபிள் ஆப்ரேட்டராக பணிபுரிந்து வருகிறேன். புருஷோத்தமன் என்பவர் என்னுடைய வீட்டிற்கு 3வது வீடு. ஆஜர் எதிரியை தெரியும். புருஷோத்தமனும் ஆஜர் எதிரியும் அண்ணன் தம்பி. புருஷோத்தமன் இறந்தது சம்பந்தமாக போலிசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்யவில்லை.

இந்த வழக்கை பற்றி எனக்கு என்ன தெரியும் என்றால் 19.10.2021 அன்று நான் தூங்கிக்கொண்டு இருந்தேன். என் வீட்டிற்கு எதிர்வீட்டில் இருந்து பச்சையம்மாள் வந்து என்னை யாரோ எரிகிறார்கள் என்று சொல்லி எழுப்பினார். பிறகு அவரே புருஷோத்தமன் தான் எரிகிறார் என்று சொன்னதால் புருஷோத்தமன் மாமா குணசேகரனுக்கு தகவல் சொன்னேன். அவர் 108-க்கு போன் செய்தார். 108ஆம்புலன்ஸ் வந்தவுடன் ஏற்றி அனுப்பி

வைத்தார்கள். நான் அருகிலேயே செல்லவில்லை. புருஷோத்தமன் எப்படி எரிந்தார் என்று எனக்கு தெரியாது.

சாட்சி விசாரணை வாக்குமூலத்திற்கு எதிராக சாட்சியம் அளித்ததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்படுகிறது.

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u>

பச்சையம்மாள் சொன்னவுடன் நான் போய் பார்த்தேன் என்றால் கிட்டவே போகவில்லை. போலிசார் விசாரித்தபோது, வாக்குமூலத்தில் புருஷோத்தமன் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது புகார் வாக்குமூலம் பதிவு செய்ததின் அடிப்படையில், வழக்கு பதிவு செய்தது பற்றியும், சம்பவத்தை நேரில் பார்த்ததாக குறிப்பிட்டு சொல்லிவிட்டு, தற்போது எதிரியும் எங்கள் தெருவை சேர்ந்தவர் என்பதால் எதிரியை காப்பாற்றவேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

பச்சையம்மாள் என்னை எழுப்பும்போது இரவு 10, 10.30 மணி இருக்கும் என்றால் சரி தான்.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.